# கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா தந்த தளபதி!

மூத்த வழக்கறிஞர்
பி.வில்சன் எம்.பி.
*தலைமைக் கழக சட்ட தலைமை ஆலோசகர்*



**எண்ணற்ற தமிழர்களின் இதயத்தில் குடியிருப்பவர் பேரறிஞர் அண்ணா. பேரறிஞர் அண்ணாவின் புகழைப் போற்றும் விதமாக சென்னையின் மையப்பகுதியில் அமைந்துள்ள சாலைக்கு அண்ணா சாலை எனப் பெயரிட்டு, அதில் அண்ணா மேம்பாலம் அமைத்து அண்ணனுக்கு பெருமை சேர்த்தார் அவரின் இதயத்தை இரவலாகப் பெற்றிட்ட அண்ணாவின் அன்புத் தம்பி. நம்முடைய ஒப்பற்ற தலைவர். முத்தமிழறிஞர் கலைஞர். அந்தப் பெரும்புகழ் பெற்ற அண்ணா மேம்பாலத்துக்கு அருகிலுள்ள கதீட்ரல் சாலையில், தமிழுக்கு செம்மொழி அங்கீகாரம் பெற்றதன் நினைவாய் அழகிய பூங்கா அமைத்து அதற்கு செம்மொழிப் பூங்கா என்று அழகுத் தமிழில் பெயரிட்டார் தலைவர் கலைஞர். கலைஞரின் பெருமையைப் போற்றும் விதமாக செம்மொழிப் பூங்காவிற்கு எதிரேயுள்ள இடத்தில் 'கலைஞர் நூற்றாண்டு பூங்கா' அமைத்துள்ளார் கலைஞரின் கொள்கை வழித்தோன்றல் முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின். சென்னையின் மையப்பகுதியில் அமைந்து மாநகருக்கு அழகு சேர்த்திடும் எழில்மிகு செம்மொழிப் பூங்காவும், கலைஞர் நூற்றாண்டுப் பூங்காவும் எளிதில் கிட்டவில்லை.**

தலைவர் கலைஞரால் அமைக்கப்பட்ட இயற்கை எழில் கொஞ்சும் செம்மொழிப்பூங்கா அமைந்துள்ள இடத்தையும், அதற்கு எதிரே உள்ள இடத்தில் முதல்வர் தளபதியால் உருவாக்கப்பட்டுள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைந்துள்ள இடத்தையும் சுயநலக்காரர்கள் ஆக்கிரமித்திருந்தனர். அ.தி.மு.க. அரசின் உதவியுடன் சுயநலக்காரரர் ஆக்கிரமித்திருந்த பலகோடி மதிப்புகொண்ட, மொத்தம் 23 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலத்தை மீட்டெடுக்க தலைவர் கலைஞர் காலத்தில் ஆரம்பித்து, தளபதி காலம் வரை 35 ஆண்டுகளாக நீண்ட தொடர் சட்டப்போராட்ட வரலாற்றைப் பதிவு செய்கிறது இக்கட்டுரை.

கதீட்ரல் சாலையின் இருபுறமும் உள்ள இடங்களில் வண்ணமிகு பூக்களால் அழகுறக் காட்சியளிக்கும் செம்மொழிப் பூங்காவும், அதற்கு எதிரே உள்ள கலைஞர் நூற்றாண்டு பூங்காவும் அமைந்துள்ளன. இவ்விரு நிலங்களும் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானவை. 1836இல் அன்றைய மெட்ராஸ் மாகாணத்தில் "தி அக்ரி ஹார்ட்டிகல்ச்சுரல் சொஸைட்டி ஆஃப் மெட்ராஸ்" என்ற பெயரில் பூங்கா உருவாக்கப்பட்டது. அதற்கு அன்றைய ஆங்கில அரசு நிதி உதவி செய்தது. ஆங்கிலேயர் காலத்திற்குப் பின்னர் அரசின் நிதி உதவி நின்றுவிட, கிருஷ்ணராவ் என்ற பிரபல சமையல் கலைஞருக்கு அந்த இடம் உள் வாடகைக்கு விடப்பட்டது. இவர் 1962இல் இப்பூங்காவில் உட்லண்ட்ஸ் ட்ரைவ் இன் என்ற உணவு விடுதியைத் தொடங்கினார். இந்த இடத்தை 'தோட்டக்கலை சங்கம்' என்ற அமைப்புப் பெயரில் அ.தி.மு.க.வின் தோட்டக்கலை வி.கிருஷ்ணமூர்த்தி என்பவர் தனது சுயலாபத்திற்குப் பயன்படுத்தி வருவதாகவும், அங்குள்ள மரங்கள் எல்லாம் கார் பார்க்கிங் வசதிக்காக வெட்டப்படுவதாகவும் பல புகார்கள் வந்தன.

பின்னர் காலப்போக்கில், தற்போது செம்மொழிப்பூங்கா அமைந்துள்ள நிலத்தையும் தோட்டக்கலை சங்கத்தின் கவுரவ செயலாளர் வி.கிருஷ்ணமூர்த்தி அ.தி.மு.க. அரசின் உதவியுடன் தன்வசப்படுத்தினார். அதே போல் தற்போது தளபதியால் திறந்துவைக்கப்பட்டிருக்கும் கலைஞர் நூற்றாண்டுப் பூங்கா அமைந்துள்ள இடத்தையும் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி ஆக்கிரமித்திருந்தார்.

**மனிதர்கள் மூச்சுவிட இதயம் முக்கியம். மாநகர் மூச்சுவிட நகரின் மையப்பகுதியில் இயற்கையான பூங்காக்களும், மரங்களும், பசுமை கொஞ்சும் தோட்டங்களும் முக்கியம். இதை உணர்ந்த தலைவர் கலைஞர் தோட்டக்கலைச் சங்கம் என்ற பெயரில் கிருஷ்ணமூர்த்தி என்பவரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள அரசுக்குச் சொந்தமான இடங்களை மீட்க வேண்டும் என்று உறுதி பூண்டார்.**

பொதுமக்களின் சொத்தான இந்த இடத்தைத் தலைவர் கலைஞர் 1989இல் ஆட்சிக்கு வந்தவுடன் மீட்டெடுக்கும் முயற்சிகளைத் தொடங்கினார். விலைமதிப்பற்ற இந்த நிலத்தை பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில், சுற்றுச்சூழலுக்கு எவ்விதப் பாதிப்புமின்றி தோட்டக்கலையை வளர்த்து, தோட்டக்கலை தொடர்பான ஆராய்ச்சிகளை நடத்தி ஊக்குவித்திட கலைஞர் எண்ணினார். சட்ட நடவடிக்கைகள் எடுத்து நிலத்தை மீட்டார். இதை எதிர்த்து, நிலத்தை ஆக்கிரமித்திருந்த தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி 1989இல் உயர்நீதிமன்றம் சென்றார். ஜெயலலிதாவின் நண்பர் என்பதால் தனிப்பட்ட விரோதம் காரணமாக நிலத்தை என்னிடம் இருந்து பறிக்க முயல்கிறார் கலைஞர் என்ற புதுவிதமான காரணத்தைக் கண்டுபிடித்து, நீதிமன்றத்தில் கூறினார் கிருஷ்ணமூர்த்தி. எதிர்ப்புகளையும், சூழ்ச்சிகளையும் மீறி முத்தமிழ் அறிஞர் கலைஞர் 17 ஏக்கர் (தற்போது செம்மொழி பூங்கா அமைந்துள்ள இடம்) நிலத்தை மீட்டார். அதன் எதிரே உள்ள மீதமுள்ள 6.09 ஏக்கர் நிலத்தையும் மீட்க வேண்டும் என்பதில் தலைவர் கலைஞர் கட்டுமரம் போல் உறுதியாக நின்றார். பொதுமக்களுக்குச் சொந்தமான நிலத்தை மீட்டெடுத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு மீண்டும் கொண்டுவரவேண்டும் என்பதில் தலைவர் கலைஞர் தீர்க்கமாய் இருந்தார்.

1989இல் மக்கள் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்திருந்தாலும், சூழ்ச்சியின் காரணமாக 2 ஆண்டுகளில் தி.மு.கழகம் ஆட்சியை இழந்தது. 1991இல் ஜெயலலிதா ஆட்சிக்கு வந்தார். அவர் போயஸ் கார்டனில் சொகுசு மாளிகையில் தூங்கினார். அரசு இயந்திரமும் தூங்கியது. நீதிமன்றத்தில் வழக்கும் தூங்கியது. தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்திக்கு கொண்டாட்டம். பல கோடி மதிப்புடைய 6.09 ஏக்கர் நிலத்தை சுருட்டிவிடலாம் என்று மகிழ்ந்திருந்தார்.

1996இல் மக்களின் தீர்ப்பு காரணமாய் ஆட்சிக்கு வந்த தலைவர் கலைஞர் மீதமிருந்த நிலத்தை 6.09 ஏக்கர் மீட்டெடுப்பதில் வேகம் காட்டினார். இருப்பினும் 1998இல் நிலத்தை மீட்டெடுக்கத் தொடுத்த வழக்கு அரசுக்கு எதிராக முடிந்தது. அதை எதிர்த்து தமிழ்நாடு அரசு மேல்முறையீடு செய்தது. 2001இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்தது. நிலத்தைக் கையகப்படுத்த கலைஞர் ஆட்சியின் போது தமிழ்நாடு அரசு செய்திருந்த மேல்முறையீட்டு வழக்கை அ.தி.மு.க. அரசு கைவிட்டது. அதாவது அந்த நிலத்தை கிருஷ்ணமூர்த்தி சொந்தமாக்கிக் கொள்ளத் தேவையான அனைத்து சட்டவிரோத நடவடிக்கைகளையும் அ.தி.மு.க. அரசு செய்து, கிருஷ்ணமூர்த்திக்கும் அவரது சங்கத்திற்கும் துணை நின்றது. அரசு நிலத்தைக் கையகப்படுத்த கலைஞர் முயற்சி செய்த போது, தோட்டக் கலை கிருஷ்ணமூர்த்தி என்ன சொன்னாரோ, அதை அ.தி.மு.க. அரசு மெய்ப்பித்தது. அதாவது ஜெயலலிதாவின் நண்பர் என்ற காரணத்திற்காக தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் சங்கத்திற்குச் சாதகமாக வழக்கை அப்போதைய அ.தி.மு.க. அரசு கைவிட்டது.

அரசின் சொத்தை தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி சட்டவிரோதமாக கைப்பற்றுவதை ஏற்றுக்கொள்ளாத கலைஞரோ விடாப்பிடியாய் இருந்தார். அ.தி.மு.க. அரசு கைவிட்ட வழக்கை மீண்டும் விசாரிக்கக் கலைஞர் அரசு கோரியது. அரசின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட சென்னை உயர்நீதிமன்றம் வழக்கைத் திரும்ப விசாரிக்க ஒப்புக்கொண்டது. இதை எதிர்த்து தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி அவரது சங்கம் சார்பாக உச்சநீதிமன்றம் சென்றார். ஆனால் அதை உச்சநீதிமன்றம் ஒப்புக்கொள்ளவில்லை.

இப்பிரச்சினை தொடர்பாக 2008இல் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் "**அரசின் முன் அனுமதி பெறாமல் வேளாண் தோட்டக்கலைச் சங்கம் இந்த நிலத்தின் ஒரு பகுதியை ஏற்கனவே உட்லாண்ட்ஸ் ஹோட்டலுக்கு உள்குத்தகைக்கு விட்டிருந்தது. கிருஷ்ணமூர்த்தி, சங்கத்தின் கவுரவச் செயலாளராக ஆன பிறகு தனது சொந்தச் சொத்து போல இந்த நிலத்தைக் கையாள்வதாக நீதிமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. இந்நிலங்கள் பொதுக் காரியங்களுக்கு மட்டுமே**



# TN govt puts on hold city collector's decision on land

TIMES NEWS NETWORK

Chennai: In a new twist to the controversy surrounding the 114-odd grounds (about 4.5 acres) of prime land on Cathedral Road, the state government has put on hold a Chennai collector's ruling that the land belonged to the Agri-Horticultural Society and not to the government.

A submission to this effect was made before the first bench of the Madras high court comprising Chief Justice M Y Eqbal and Justice T S Sivagnanam by advocate-general A Navaneethakrishnan when a public interest writ petition filed by Y Bhuvanesh Kumar challenging the collector's order came up for hearing on Friday.

After several rounds of litigation following a government decision in 1989 to take over the land, the HC in March 2010 asked the authorities to issue a show-cause notice and give the society reasonable opportunity to prove its claim over the property. However, though notices were issued in September and October 2010 there was no progress on the issue. On December 8, 2010, the then DMK government issued another notice to take possession of the property. On August 22, 2011, the collector ruled that the title of the land belonged to the society.

P Wilson, the petitioner's counsel, said grave irregularities had taken place in handing over the land to the society and that the HC order had been deliberately misinterpreted by authorities. The collector's order was passed when Chennai district did not have a regular district collector, he said.

The advocate-general then furnished an order passed by the principal secretary and commissioner of land administration, dated November 1, 2011, stating that the collector's order had been stayed and that the government had decided to review it. The order said the collector had passed the ruling though there was no documentary evidence to establish that the society had the title over the land. The society, on its part, has already filed a petition challenging the principal secretary's order.

Recording this development, the first bench then said: "When the order dated November 1 itself has become a subject matter of a writ petition, the present PIL in our view has become infructuous. It is accordingly dismissed."

The controversy surrounding the land took centrestage in October when DMK president M Karunanidhi, in the run-up to the local body elections, charged that the collector surrendered its ownership rights to the society owing to extraneous political considerations. The prime property, worth about Rs 500 crore, is located opposite the Semmozhi Poonga, a 20-acre botanical garden.

NEW TWIST: The land on Cathedral Road

**பயன்படுத்தப்பட வேண்டும்**" என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் அ.தி.மு.க. அரசின் உதவியுடன் பொதுச்சொத்தைத் தன்வயப்படுத்துவதைத் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி குறி க்கோளாகக் கொண்டிருந்தார். அது கலைஞரால் முறியடிக்கப்பட்டது.

**2004இல் தலைவர் கலைஞர் தமிழ்மொழிக்குச் செம்மொழித் தகுதியைக் காங்கிரஸ் தலைவர் அன்னை சோனியா காந்தி மூலம் பெற்றார். தமிழுக்குச் செம்மொழித் தகுதி கிடைத்ததைக் கொண்டாடும் வகையில் செம்மொழி மாநாடு, செம்மொழித் தமிழாய்வு நிறுவனம், அடையாறு தொல்காப்பியப் பூங்கா என அடுத்தடுத்து ஒவ்வொன்றாய் நடத்திக் காட்டினார் கலைஞர். அரும்பாடு பட்டுப்பெற்ற செம்மொழித் தகுதியின் அடையாளமாக கிருஷ்ண மூர்த்தியின் சங்கத்திடமிருந்த மீட்ட 17 ஏக்கர் நிலத்தில் அழகிய பூங்கா அமைத்து, அதற்குச் செம்மொழிப் பூங்கா என்ற பெயரிட்டார் தலைவர் கலைஞர்.**

தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் ஆக்கிரமிப்பில் இருந்த மீதமுள்ள 6.09 ஏக்கர் நிலத்தை மீட்பதிலும் தலைவர் கலைஞர் உறுதியாய் நின்றார். அரசுக்குச் சொந்தமான 6.09 ஏக்கர் நிலத்தை அரசு ஏன் கையகப்படுத்தக் கூடாது என்று சென்னை மாவட்ட ஆட்சியர் 2010இல் தோட்டக்கலை கிருஷ்ண மூர்த்திக்கு நோட்டீஸ் அனுப்பினார். 2010 செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அனுப்பப்பட்ட நோட்டீஸ்களுக்கு கிருஷ்ணமூர்த்தி முறையான பதிலளிக்கவில்லை. எனவே 08.12.2010 அன்று நிலத்தைக் கையகப்படுத்தப் போவதாக கிருஷ்ணமூர்த்தியின் சங்கத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டது. 15.12.2010க்குள் இடத்தைக் காலி செய்யவேண்டும் என்று உத்தரவிடப்பட்டது. இருப்பினும் இடத்தை அவர் காலி செய்யவில்லை. மாவட்ட ஆட்சியரின் உத்தரவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் கிருஷ்ணமூர்த்தி அவரது சங்கம் சார்பாக வழக்குத் தொடுத்தார்.

இந்நிலையில் 2011இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு, அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்தது. கலைஞர் ஆட்சியில் அரசுக்குச் சொந்தமான நிலத்தை கையகப்படுத்தும் வகையில் உத்தரவிட்ட மாவட்ட ஆட்சியரின் முடிவை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் கிருஷ்ணமூர்த்தி தொடுத்திருந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் இவ்விவகாரம் தொடர்பாக மாவட்ட ஆட்சியர் முடிவு செய்யலாம் என்று உத்தரவிட்டது. அ.தி.மு.க. அரசு பொறுப்பேற்ற பின்பு, சென்னை மாவட்ட ஆட்சியர் மாற்றப்பட்டு கே.ஏ.அண்ணாமலை என்பவருக்கு கூடுதல் பொறுப்பாக சென்னை மாவட்ட ஆட்சியர் பதவி தரப்பட்டது. அதன்பின் 6.09 ஏக்கர் நிலம் கிருஷ்ணமூர்த்தியின் தோட்டக்கலை சங்கத்துக்குச் சொந்தமானது என்று 22.08.2011 அன்று சென்னை மாவட்ட ஆட்சியர் அண்ணாமலை உத்தரவிட்டார். அரசு புறம்போக்கு நிலம் என்ற பிரிவிலிருந்து அந்த இடத்தை மாற்றி கிருஷ்ணமூர்த்தியின் தோட்டக்கலை சங்கத்தின் பெயரில் அதைப் பதிவு செய்ய 10.10.2011 அன்று தாசில்தார் ஆணை பிறப்பித்தார். அதன்படி பட்டாவும் வழங்கப்பட்டது.

**இதை அறிந்த கலைஞர் வெகுண்டெழுந்தார். சென்னை மாநகரின் மையத்தில் அமைந்துள்ள பொதுமக்களுக்குச் சொந்தமான இடத்தை தனியார் சட்டப்புறம்பாக ஆக்கிரமித்துள்ளதை ஏற்றுக்கொள்ளாத கலைஞர் நீதிமன்றத்தை அணுக ஒரு நபரைத் தேர்வு செய்து அவருக்குக் கட்டளையிட்டார். அப்போது ஜெயலலிதாவின் ரவுடி ஆட்சி நடந்துகொண்டிருந்தது. கலைஞர் தேர்வு செய்த நபர் சில காரணங்களால் பின்வாங்கினார். கலைஞர் என்னை அழைத்துக் கேட்டார். பொதுமக்களுக்குச் சொந்தமான இடத்தை சட்ட விரோதமாக தனிநபர்கள் ஆக்கிரமிப்பதை அனுமதிக்க முடியாது என்பதில் உறுதியாய் நின்ற கலைஞர், அதற்குத் தேவையான அனைத்துச் சட்ட நடவடிக்கைகளையும் எடுக்க எங்களுக்கு ஆணையிட்டார். கலைஞர் காட்டிய வழியில் நாங்களும் அரசுக்குச் சொந்தமான நிலத்தை மீட்டெடுக்க சட்டப்படியான அனைத்துக் காரியங்களையும் மேற்கொண்டோம்.**

புவனேஷ்வர் குமார் எனும் இளம் வழக்கறிஞரை அழைத்துச் சென்றேன். இவர் பெயரில் வழக்குத் தாக்கல் செய்து, அந்த வழக்கை நானே கவனித்துக் கொள்கிறேன் என்று கலைஞரிடம் கூறினேன். புவனேஷ்வர் குமாரைக் கண்டவுடன் இவர் தான் புவனேஷ்குமாரா என்று வினவிய கலைஞர் அவருக்கே உரிய பாணியில் ஓடும் பாம்பை மிதிக்கும் இளம் வயதினராய் இருக்கிறீர்கள், எச்சரிக்கையாக வழக்கைக் கையாளவேண்டும் என்று எங்களுக்கு அறிவுறுத்தினார்.

இதுபோன்ற சம்பவம் 2001இலும் நடந்தது. அப்போது டான்சி வழக்கை விசாரித்த நீதிபதியை மாற்றுமாறு உச்சநீதிமன்றம் சென்று அன்றைய முதல்வர் ஜெயலலிதாவுக்கு எதிராக நாங்கள் உத்தரவு பெற்றோம். அப்போது அ.தி.மு.க.வைச் சேர்ந்த உயர்பதவியில் இருந்த ஒருவர் "நீ வீட்டிற்குப் பத்திரமாகச் சென்றுவிடுவாயா" என்று என்னை மிரட்டினார். அன்று என்னுடன் இருந்த நண்பர் இவ்விஷயத்தை கலைஞரிடம் கூறிவிட்டார். பயமறியாத இளங்கன்றாக இருந்த என்னை கலைஞர் தொலைபேசியில் அழைத்து எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று அக்கறையுடன் அறிவுறுத்தினார். நீங்கள் துணையாக இருக்கும் போது எனக்கென்ன பயமென்றேன். கலைஞரின் துணையுடன் அவ்வழக்குகளில் கவனம் செலுத்தினேன்.


அதுபோலவே 6.09 ஏக்கர் நிலத்தை மீட்கும் சட்டபோராட்டத்திலும் கலைஞரின் பாதுகாப்பில், சென்னை உயர்நீதிமன்றத்தில் புவனேஷ்குமார் சார்பில் பொதுநல வழக்குத் தொடுத்தேன். அப்போதைய தலைமை நீதிபதி இக்பால், நீதிபதி சிவஞானம் ஆகியோர் முன்பு நடைபெற்ற விசாரணையில் நான் ஆஜராகி வாதாடினேன். ஜெயலலிதாவின் குடும்ப நண்பர் என்பதால் மோசடியான உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எனவே அது சட்டவிரோதம் என்று அறிவிக்கவேண்டும் என்று வாதிட்டேன். அரசுத் தரப்பில் அட்வகேட் ஜெனரல் நவநீதிகிருஷ்ணன் ஆஜரானார்.

**இதற்கிடையே முறைகேடாக அரசு நிலத்தை தனியாருக்கு ஒப்படைத்தை மாவட்ட ஆட்சியரின் உத்தரவைக் கண்டித்து கலைஞரின் காட்டமான அறிக்கை வெளிவந்தது. கலைஞரின் அறிக்கை பல பத்திரிகைகளில் செய்தியாகவும் வெளிவந்தது. இதைக் கண்ட ஜெயலலிதா அரசு அச்சமடைந்தது. அதைத் தொடர்ந்து, சென்னை மாவட்ட கலெக்டர் கடந்த 22.08.2011 அன்று பிறப்பித்த உத்தரவைத் தடை செய்து, அந்த முடிவை மீளாய்வு செய்ய 1.11.2011 அன்று நில நிர்வாக ஆணையர் ஸ்வரன் சிங் உத்தரவிட்டுள்ளார் என்று நீதிமன்றத்தில் கூறிய அட்வகேட் ஜெனரல் நவநீதிகிருஷ்ணன் அதற்குரிய ஆவணங்களையும் தாக்கல் செய்தார். இதை ஏற்றுக்கொண்ட நீதிமன்றம் நாம் தொடுத்த பொதுநல வழக்கை முடித்துவைத்தது. நில ஆணையர் ஸ்வரன் சிங் பிறப்பித்த தடை உத்தரவை எதிர்த்து தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி ரிட் மனு தாக்கல் செய்தார்.**

எப்படியேனும் அரசு நிலத்தை மீட்கவேண்டும் என்ற நோக்கில் உறுதியாக இருந்த நாங்கள் முடித்து வைக்கப்பட்ட உத்திரவை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றோம். கலைஞரின் ஆணையின் பேரில் கண்கொத்திப் பாம்பாய் பின்தொடர்ந்தோம். உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஜி.எஸ்.சிங்வி, முகபாத்யா அமர்வில் விசாரணைக்கு வந்த அவ்வழக்கில் நான் ஆஜராகி வாதிட்டேன். அரசு நிலத்தை ஜெயலலிதா அரசு தனியாருக்கு தாரை வார்த்துவிட்டது. அதை மீட்கும் சட்டப் போராட்டத்தின் நியாயத்தை உணர்ந்த உச்சநீதிமன்றம் சென்னை உயர்நீதிமன்றத்தில் ஒரு தரப்பாக இணைந்து இடையீட்டு மனு தாக்கல் செய்ய உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. அதன்படி சென்னை உயர்நீதிமன்றத்தில் இடையீட்டு மனு தாக்கல் செய்தோம். அதை உயர்நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, எங்களையும் ஒரு தரப்பினராக சேர்க்க தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி சங்கம் தாக்கல் செய்த வழக்கில் உத்தரவிட்டது.

அதன் பிறகு அ.தி.மு.க.வின் 10 ஆண்டுகால ஆட்சிக்காலத்தில் இவ்வழக்குகளை தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் சங்கத்திற்குச் சாதகமாக முடித்து வைக்க அ.தி.மு.க. அரசு முயற்சி செய்தது. கலைஞரின் அறிவுறுத்தலின் பேரில், வழக்கில் ஒரு தரப்பினராக இணைந்த நாங்கள் அ.தி.மு.க. அரசின் உதவியுடன் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி செய்த முயற்சிகள் அனைத்தையும் விழிப்புணர்வுடன் இருந்து முறியடித்து கொண்டே வந்தோம். நிலத்தை சுருட்ட விரும்பிய வாதியும் (கிருஷ்ணமூர்த்தி தரப்பு), நிலத்தை மீட்கும் பொறுப்பில் இருந்த பிரதிவாதியும் (அ.தி.மு.க. அரசு) இணைந்து செயல் பட்டு, கிருஷ்ணமூர்த்திக்குச் சாதமாக வழக்கை நகர்த்தும் பல்வேறு முயற்சிகளை எடுத்தனர். நாங்கள் Watch Dog போல் செயல்பட்டு, அவர்களின் கூட்டுக் களவாணித்தனத்தை முறியடித் தோம்.

இதற்கிடையே 2011இல் ஆட்சிக்கு வந்தது முதல் எழில் கொஞ்சும் செம்மொழிப் பூங்காவை அ.தி.மு.க. ஆட்சியாளர்கள் பராமரிக்கவில்லை. அ.தி.மு.க. அரசின் பொறுப்பற்ற தன்மையைக் கண்டித்த தலைவர் கலைஞர், "**தமிழ்மொழியும் செம்மொழித் தகுதியை அடைய வேண்டும் என்பதற்காக அரும்பாடுபட்டு அன்னை சோனியா காந்தி மூலம் அந்தத் தகுதியைப் பெற்றோம். அதன் அடையாளமாக அண்ணா மேம்பாலம் அருகே அமைக்கப்பட்ட பூங்காவிற்கு செம்மொழி என்ற பெயரை வைத்தேன். இப்போது செம்மொழிப் பூங்கா என்ற பெயர் பலகையைப் படர்ந்த கொடிகளால் மறைத்துள்ளனர். பூங்காவை நான் திறந்து வைத்தேன் என்ற கல்லையும் மறைத்துள்ளனர். கல்லணையில் கரிகாலன் கட்டினான் என்றா எழுதப்பட்டுள்ளது. ஆனால் வரலாறு அவன் பெயரைச் சொல்கி**



CERTIFICATE

Issued to Thiru/Thirumathi THE AGRI HORTICULTURAL SOCIETY

Extract from the Town Survey Land Register

MYLAPORE

CATHEDRAL ROAD | THE AGRI HORTICULTURAL SOCIETY | BOTANICAL GARDEN

**றதா இல்லையா? அதைப்போல எத்தனை ஆண்டுகள் ஆனாலும் நான்தான் அந்தப் பூங்காவை திறந்து வைத்தேன், தமிழுக்குச் செம்மொழித் தகுதியைப் பெற்றுத் தந்தேன் என்பதை யாராலும் மறைக்க முடியாது.**" என்று அறிக்கை வெளியிட்டார்.

10 ஆண்டுகளாக கண்களில் விளக்கெண்ணை ஊற்றிக் கொண்டு, கலைஞரின் ஆணைக்கேற்ப நீதிமன்றங்கள் மூலமாக மீதமுள்ள 6.09 ஏக்கர் நிலத்தைக் காப்பாற்றி வந்தோம். அ.தி.மு.க. அரசின் உதவியோடு நிலத்தைக் கைப்பற்றிவிட வேண்டும் என்று தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டார். தலைவர் கலைஞர் விழிப்புடன் இருந்து தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் முயற்சிகளையும், அதற்குத் துணைபோகும் அ.தி.மு.க. அரசின் மோசடியையும் தொடர்ந்து அம்பலப்படுத்திக்கொண்டே வந்தார்.

**"100 ஆண்டுகளுக்கும் மேலாக வில்லங்கம் சரி பார்த்ததில் இந்த நிலம் அரசுக்குச் சொந்தமானதென்றே உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த நிலம் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தியின் சங்கத்திற்கு சொந்தமானதென முடிவு செய்ய, எவ்வித அடிப்படை முகாந்திரமும் இல்லை. அ.தி.மு.க. ஆட்சியில் 'நில அபகரிப்பு' என்ற பெயரில் எதிர்க்கட்சியினர் மீது ஏராளமான பொய் வழக்குகளைப் புனைந்து வரும் வேளையில், சென்னை மாநகரத்தின் மையப் பகுதியில், 200 கோடி ரூபாய்க்கும் குறைவில்லாத மதிப்புடைய அரசு நிலம்; அ.தி.மு.க. ஆட்சியாளர்களின் ஆசிகளோடும், அதிகாரிகளின் துணையோடும் அபகரிக்கப்படும் அநீதியை நல்லவர்களும், நடுநிலை நாளேடுகளும் தட்டிக் கேட்க முன் வர வேண்டாமா? 'நல்லவர்கள் நமக்கென்ன என்று இருந்துவிட்டால் நாடு என்னாவது?' என்று அறிஞர் அண்ணா, அன்று கேட்டதை; இம்மாநிலத்தில் உள்ள அனைவர்க்கும் இன்று நினைவூட்டுகிறேன்!"** என்று தலைவர் கலைஞர் 10.10.2011 அன்று அறிக்கை வெளியிட்டு அ.தி.மு.க. அரசின் மோசடியை அம்பலப்படுத்தினார்.

2021இல் தி.மு.கழகம் மகத்தான வெற்றிபெற்று தளபதி முதல்வரானார். 2011இல் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி தாக்கல் செய்த வழக்கின் விசாரணையை விரைவுபடுத்தி, அரசு நிலத்தை மீட்க இதுவே சரியான தருணம் என்று உணர்ந்து தளபதியாரின் ஆசியோடும், அறிவுரையோடும் வழக்கை விசாரணைக்குப் பட்டியலிட்டேன். வழக்கு விசாரணையின் போது ரூ.500 கோடி மதிப்புள்ள அரசு நிலத்தை, முந்தைய அ.தி.மு.க. அரசின் உதவியோடு அபகரிக்க மனுதாரர் முயற்சித்துள்ளார் என்று புவனேஷ்குமார் சார்பில் நான் வாதிட்டேன். நிலத்தை கையகப்படுத்தும் தற்போதைய திராவிட மாடல் அரசின் முயற்சி சரியென்று ஏற்றுக்கொண்ட சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி சதிஷ்குமார் தோட்டக்கலை கிருஷ்ணமூர்த்தி சங்கத்தின் வழக்கை தள்ளுபடி செய்தார். இதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சில் கிருஷ்ணமூர்த்தி மேல்முறையீடு செய்தார். அதை விசாரித்த நீதிபதிகள் டி.ராஜா, பரதசக்கரவர்த்தி அடங்கிய அமர்வு தனிநீதிபதியின் உத்தரவை ஏற்றுக்கொண்டது. இந்த இடம் அரசுக்குச் சொந்தமானது என்பதை அவர்கள் உறுதிப்படுத்தினர். இதை எதிர்த்து கிருஷ்ணமூர்த்தி உச்சநீதிமன்றம் சென்றார். நாம் அங்கு சென்றும் வாதிட்டோம். கிருஷ்ணமூர்த்தியின் வழக்கை உச்சநீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

**அரசு நிலத்தை மீட்கும் நடவடிக்கைக்கு எவ்வித சட்டத்தடைகளும் இல்லை என்பதால், 25.04.2023 அன்று நிலத்தைக் சுவாதீனம் எடுக்கும் வகையில் சென்னை மாவட்ட ஆட்சியர் நோட்டீஸ் அனுப்பினார். அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் குறித்து விசாரணை செய்யுமாறு நில ஆணையருக்கு உத்தரவிட்டார். 2012 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் அரசுக்கு 341 கோடி இழப்பு ஏற்பட்டது என அவர் கணக்கிட்டு அறிக்கையளித்தார். அரசின் உத்தரவை கிருஷ்ணமூர்த்தியின் சங்கம் செயல்படுத்தவில்லை. எனவே தளபதியின் 'திராவிட மாடல்' அரசு நிலத்தைக் கையகப்படுத்தியது. இவ்வளவு காலம் அரசு நிலத்தைப் பயன்படுத்தியதற்காக ரூ.341 கோடி தரவேண்டும் என்று கிருஷ்ணமூர்த்தியின் சங்கத்திற்கு உத்தரவிட்டது.**

தோட்டக்கலை சங்கத்தில் அ.தி.மு.க.வைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மட்டுமே உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. நிலத்தை அரசு சுவாதீனம் எடுத்ததை எதிர்த்து கிருஷ்ணமூர்த்தி அவரது சங்கம் சார்பாக சென்னை உயர்நீதிமன்றம் சென்றார். இவ்வழக்கை விசாரித்த சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி எஸ்.எம். சுப்பிரமணியன் அவர்கள் கிருஷ்ணமூர்த்தி அவரது சங்கம் சார்பாக தொடுத்த வழக்கை 4.7.2023 அன்று தள்ளுபடி செய்தார். இதை எதிர்த்தும் கிருஷ்ணமூர்த்தி அவரது தோட்டக்கலை சங்கம் சார்பாக சென்னை உயர்நீதிமன்ற டிவிஷன் பெஞ்சில் மேல்முறையீடு செய்தார். **இருப்பினும் அரசு நிலத்தை சுவாதீனம் எடுத்ததை எதிர்த்து எவ்வித உத்தரவையும் நீதிமன்றம் பிறப்பிக்கவில்லை. நிலத்தைக் மீட்க எவ்வித சட்டத்தடைகளும் இல்லை என்பதால், அரசுக்குச் சொந்தமான இடம் தளபதியின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு அரசு மீட்டது. பலகோடிகள் மதிப்பு கொண்ட இந்நிலத்தை மீட்டது திராவிட மாடல் ஆட்சியின் மிகப்பெரும் சாதனைகளில் ஒன்று. பெரும் பாராட்டிற்குரிய இச்சாதனையைக் கண்டுகொள்ள பத்திரிகைகளுக்கு ஏனோ மனம் வரவில்லை. ரூ.1000 கோடி மதிப்புள்ள நிலத்தை மீட்டெடுத்த தளபதியின் சாதனையைப் பாராட்ட மனம் இல்லை போலும்.**

**கலைஞரின் தொடர் முயற்சிக்குத் துணை நின்று, வழக்குத் தொடுத்து, சென்னை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இவ்வளவு பெரிய இடத்தை, சட்டப்போராட்டம் நடத்தி மீட்க உதவிய என்னை முதல்வர் தளபதியார் நேரில் அழைத்துப் பாராட்டினார். அரசுக்குச் சொந்தமான 6.09 ஏக்கர் நிலம் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, அவ்விடத்தில் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக, உலகத் தரம் வாய்ந்த இயற்கை கொஞ்சும் கலைஞர் நூற்றாண்டு பூங்காவை முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் தமிழ்நாட்டு மக்களுக்குத் தந்துள்ளார்.**

அரசு நிலத்தை மீட்க தலைவர் கலைஞர் தொடங்கிய சட்டப்போராட்டத்தைத் தளபதி மு.க.ஸ்டாலின் முடித்து வைத்துள்ளார். தலைவர் கலைஞர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் சட்டப்போராட்டம் நடத்தி, புவனேஷ்குமார் என்ற பெயரில் வழக்கு நடத்தி, 6.09 ஏக்கர் அரசு நிலத்தை மீட்டெடுக்க உதவியதில் எனக்கும் பங்குள்ளது என்பதை நினைக்கையில் மகிழ்வாகவும் நிறைவாகவும் உள்ளது. அதன் உச்சமாய் தலைவர் கலைஞரின் நூற்றாண்டு விழா நினைவாக புத்தம்புதிய எழில்மிகு பூங்கா அமைந்துவிட்டது இன்னும் கூடுதல் மகிழ்வு. தனிநபர்களால் சட்டவிரோதமாக ஆக்கிரமிக்கப்பட்டிருந்த நிலத்தை மீட்கக் முழுமுதல் காரணமாக இருந்த கலைஞரின் பெயரிலேயே இந்த நிலத்தில் பூங்கா அமைக்கப்பட்டிருப்பது மிகவும் பொருத்தமானதாகும். கலைஞர் இல்லையெனில் ரூ.1000 கோடி மதிப்புள்ள இந்த இடம் தமிழ்நாடு அரசுக்கும் மக்களுக்கும் கிடைத்திருக்காது. அ.தி.மு.க.வின் கிருஷ்ணமூர்த்தியின் சொந்தச் சொத்தாக மாறியிருக்கும்.

'இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல்லரணும் நாட்டிற்கு உறுப்பு' என்றார் திருவள்ளுவர். வள்ளுவர் வழியில் நாட்டிற்கான வல்லரணாகத் திகழ்ந்தவர் தலைவர் கலைஞர். பொதுமக்களுக்குரிய சொத்தை மீட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்கு கொண்டுவரவேண்டும் என்பதில் உறுதியுடன் இருந்தார் தலைவர் கலைஞர். அதற்கு ஒரு சிறந்த உதாரணம் செம்மொழிப் பூங்கா. செம்மொழியாம் தமிழ்மொழி நிலைத்துநிற்கும் வரையில் தலைவர் கலைஞரின் புகழ் நிலைத்து நிற்கும். அதன் அடையாளமாய் சென்னை மாநகரின் மையத்தில் எழிலோடு காட்சியளிக்கும் செம்மொழிப் பூங்கா மணம் வீசுகிறது.

**கலைஞரின் பாதையில் பயணிப்பவர் தலைவர் தளபதி. தலைவர் கலைஞர் காட்டிய வழியில் பயணித்து, தலைவர் கலைஞர் மீட்டெடுத்துக் கட்டிய செம்மொழிப்பூங்காவிற்கு எதிரில் 6.09 ஏக்கர் இடத்தை மீட்டெடுத்த தலைவர் தளபதி, கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைத்து தலைவர் கலைஞரின் எண்ணத்தைத் தளபதி நனவாக்கியுள்ளார். சென்னை நகரின் மையப்பகுதியில் அமைந்துள்ள இந்த இரு பூங்காக்களும், இரு நுரையீரல்கள் போல் செயல்படுகின்றன என்று கூறினால் மிகையாகாது. இந்த இரு நிலங்களையும் பொது நம்பிக்கை கோட்பாடு (Public Trust Doctrine) மற்றும் வருங்காலத் தலைமுறைகளுக்கு இயற்கை வளங்களை நன்முறையில் அளிக்கும் கோட்பாடு (Doctrine of Intergenerational Equity) ஆகியவற்றின் அடிப்படையில் எதிர்காலத் தலைமுறையினர் பயன்படுத்தும் வகையில் ஒப்படைத்துள்ளார் கழகத் தலைவர் தளபதியார். தனியார் ஆக்கிரமிப்பாளர்களிடம் இருந்து மீட்டு தமிழ் மக்களுக்கு அர்ப்பணித்த தளபதியின் பெருமையை இப்பூங்காவின் ஒவ்வொரு அடையாளமும் என்றென்றும் கூறும். கலைஞர் நூற்றாண்டு பூங்காவில் உள்ள வண்ணமய மலர்கள் எக்காலத்திலும் தளபதியின் பெருமையை நறுமணம் வீசிச் சொல்லும்.**